


Vol.29 | No. 9|September 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





10-08-2025

Catechism Annual day at Kalluvilai



09-08-2025

Mathru Jyothis Inauguration at Kalluvilai



08-08-2025



Heavenly adieu to **Rev. Father Joseph Madathil**
who served our Diocese for 16 Years

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :9 SEPTEMBER 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் திருமுகம் | 08 |
| மறைக்கல்வி | 17 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 23 |
| இல்வாழ்வு இயக்கம் | 24 |
| உறவிய மலர் | 25 |
| பொது நிலையினர் பணிக்குழு | 26 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 28 |
| நலவாழ்வுபணிக்குழு | 31 |
| மறைமாவட்ட செய்திகள் | 33 |
| மறைவட்ட செய்திகள் | 35 |
| தென்காசி மறைத்தள செய்திகள் | 43 |
| MONTHLY AGENDA - SEPTEMBER 2025 | 44 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 47 |
| BISHOP'S ENGAGEMENTS - SEPTEMBER 2025 | 48 |

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Thomas Kuzhikodil**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. S.M.Edwinson**
**Mr. Iyathurai**
Published by:
**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Mary Jency V.M**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/173/2025** **31 August 2025**

**Dear Readers,**

Greetings and Prayerful wishes from Bishop's House, Thuckalay!

As shepherds of God's people in this digital age, we must carefully evaluate how emerging technologies can support our pastoral mission while remaining true to the Gospel. Artificial Intelligence (AI) presents both unprecedented opportunities and significant challenges for pastoral ministry. As Scripture reminds us, "Test everything; hold fast to what is good" (1 Thes 5:21).

The Second Vatican Council's Gaudium et Spes reminds us that "the Church has always had the duty of scrutinising the signs of the times and of interpreting them in the light of the Gospel" (GS 4). AI is one such significant sign requiring careful pastoral discernment. Pope Francis, in Fratelli Tutti, discusses technology as potentially enhancing "the quality of human life" while warning it can also "limit and condition freedom" (FT 105).

We encounter AI daily through smartphones, social media, and digital services. As pastors, we must understand these tools not merely as external phenomena but as instruments that can either support or impede genuine human growth central to our mission. The Compendium of Social Doctrine reminds us that "technological development must be guided by respect for human dignity" (CSDC 458).

**Understanding Artificial Intelligence**

Artificial Intelligence refers to computer systems designed to perform tasks usually requiring human intelligence: learning, reasoning, problem-solving, and language understanding. These systems analyse vast amounts of data, generate human-like text, translate languages, and help with communication and decision-making. Modern AI, especially large language models, show impressive

abilities in understanding context and producing coherent responses.

However, we must understand AI's fundamental nature and limitations. These systems operate through statistical patterns and mathematical algorithms, not genuine understanding or consciousness. They lack the divine spark of human consciousness, capacity for authentic love, moral reasoning, spiritual experience, and ability to encounter the transcendent. As the Catechism teaches, humans are created "in the image of God" (CCC 1702), possessing dignity no machine can replicate.

AI systems mirror the intentions, biases, and limitations of their creators and training data. They can reinforce inequalities, reflect secular worldviews contradicting Catholic teaching, and operate without considering the supernatural dimension of human existence. Recognising these limitations is vital for responsible pastoral application.

**Opportunities in Pastoral Ministry**

**Enhanced Catechetical Preparation:** AI tools can greatly assist in creating catechetical materials, homilies, and educational content. These systems excel at research, aiding in gathering Biblical passages, patristic sources, and theological insights from Catholic tradition. When preparing homilies, AI can compile relevant commentaries from Church Fathers, papal documents, and contemporary theology, providing a comprehensive background for prayerful reflection.

AI can create age-appropriate explanations of complex theological ideas for different audiences, generate discussion questions, suggest practical Gospel applications, and assist in organising catechetical content pedagogically. However, all material must be carefully checked against authentic Catholic teaching and complemented with personal prayer and study of authoritative sources.

**Multilingual Ministry and Cultural Sensitivity:** In our diverse Eparchy, where Malayalam, Tamil, and English are spoken, AI translation tools can assist with basic communication and help make pastoral resources accessible across linguistic barriers. These tools can translate pastoral letters, prayer resources, catechetical materials, and announcements, ensuring all members of the community have access to important parish information.

AI can assist in understanding cultural nuances when ministering to diverse families, especially in marriage preparation for couples from different backgrounds. It can help develop culturally appropriate liturgical materials that honour diversity while upholding doctrinal integrity—particularly relevant in our Syro-Malabar context, celebrating our tradition whilst remaining in universal communion.

**Administrative Efficiency:** AI can streamline administrative tasks that take up significant pastoral time, such as scheduling, organising records, managing communications, creating newsletters, and coordinating parish activities. This allows for greater focus on core responsibilities: celebrating sacraments, preaching, and caring for souls.

The technology can analyse parish patterns—attendance trends, sacramental participation, programme engagement—offering insights for pastoral planning. AI assists in managing charity work by monitoring community needs, organising volunteers, and ensuring efficient resource distribution, aligning with the Church's preferential option for the poor.

**Evangelisation and Digital Outreach:** Many people, especially young adults, spend considerable time online, and AI-enhanced platforms support evangelisation and re-engagement initiatives. These tools help in creating engaging social media content, analysing spiritual questions posed by individuals, and identifying outreach opportunities.

AI can support online retreats, virtual prayer groups, and remote spiritual guidance—valuable for homebound parishioners or those in distant areas. However, digital ministry should always complement rather than replace sacramental life and communal worship, which are essential to Catholic growth.

## Serious Concerns and Limitations

**Irreplaceable Human Pastoral Care:** The main concern is AI's inability to substitute for the genuine human encounter at the heart of salvation work. Pastoral ministry's core is the personal relationship between the pastor and the faithful, modelled on Christ's ministry. Pope Benedict XVI wrote: "Being Christian is not the result of

an ethical choice or lofty idea, but the encounter with an event, a person" (Deus Caritas Est 1).

Sacramental life depends on human priests acting in persona Christi. No AI can absolve sins, consecrate the Eucharist, or confer sacramental grace through ordained ministry. Beyond sacraments, consolation, spiritual direction, and pastoral counselling require human empathy, personal faith experience, and the ability to recognise the Holy Spirit's movements in souls.

**Moral and Doctrinal Concerns:** Many AI systems are trained on data that includes content opposed to Catholic moral teaching. They may generate responses that conflict with Church doctrine on sexuality, bioethics, marriage, social justice, and human nature. These systems often reflect moral relativism and secular humanism, which could lead authentic individuals away from true teachings.

AI cannot differentiate between authoritative Church teaching and theological opinions, potentially presenting speculative or heretical ideas as equally valid alongside definitive doctrinal statements. They cannot recognise the hierarchy of truths within doctrines or comprehend doctrinal development within unchanging principles. Priests must never rely solely on AI for moral questions or spiritual guidance.

**Privacy and Confidentiality Concerns:** The use of AI raises significant data privacy issues, particularly in pastoral contexts where sensitive information is exchanged. The Church's commitment to pastoral confidentiality, especially the sacred seal of confession, must never be compromised by technological tools that store, analyse, or risk exposing confidential information.

Many AI systems store conversation data and may be accessed by developers or government bodies. Information shared with AI often lacks the legal and moral protections found in traditional pastoral relationships. Priests must be very careful about inputting personal parishioner information into AI systems.

**Dependency and Genuine Development:** Overreliance on AI risks hindering priests' intellectual and spiritual growth. Scripture study, theology, and Church teaching require personal engagement and prayerful reflection that cannot be delegated. As St Paul reminds

us: “Do your best to present yourself to God as one approved, a worker who does not need to be ashamed, rightly handling the word of truth” (2 Tim 2:15).

Authentic spiritual leadership demands personal holiness, continual conversion, and lived Gospel experience, growing only through persistent prayer, discipline, and personal encounters with Christ. Priests whose ministry becomes excessively AI-mediated may find themselves detached from the spiritual realities they are called to proclaim.

## Practical Guidelines for Implementation

**Fundamental Principles:** Any AI use must uphold genuine human dignity rather than diminish it, ensuring technology supports rather than replaces authentic human interaction. Be transparent with communities about when and how you employ AI tools. Never use AI for tasks that require sacramental priesthood or intimate pastoral counselling. Always verify AI-generated content against authentic Church teachings before sharing.

Use AI as a research aid and initial resource, but never replace personal study, prayer, and reflection. When preparing homilies, utilise AI to gather information and ideas, but ensure your final message is rooted in prayerful Scripture engagement and genuine personal witness.

**Specific Safety Protocols:** Clearly define boundaries regarding confidential information. Never input personal parishioner details, pastoral counselling data, or sensitive parish matters into AI systems. For administrative tasks, anonymise data where possible and remain mindful of privacy implications associated with cloud-based systems.

Ensure consistent reviews of AI usage patterns. Evaluate whether tools genuinely support the desired improvement of the ministry without compromising pastoral authenticity. Be alert to signs of overreliance, such as difficulty preparing content without AI or hesitation to engage in traditional study methods. Consider scheduling regular “digital fasting” periods to promote ongoing development of personal theological skills.

**Integration with Traditional Formation:** AI should enhance, not supplant, traditional priestly formation methods. Maintain regular Scripture study through lectio divina, engage with classical theological texts and contemporary magisterial documents, and pursue ongoing education to deepen Catholic understanding and pastoral practice.

Develop balanced approaches using AI for appropriate tasks while safeguarding time for contemplative priestly activities that cannot be improved by technology: personal prayer, spiritual reading, pastoral reflection, and virtue cultivation, which define authentic leadership. Tools should liberate time for these essential practices rather than diminish them.

**Eparchial Training program on AI**

As an Eparchy, with the assistance of Fr Robins Kuzhikodil and other experts, we shall organise ongoing training on AI and pastoral ministry through workshops, resources, and updates on technological advances. These sessions will give us an understanding and experience on how to use AI in our daily pastoral ministry. Specifically, we'll learn to use AI for tasks like creating posters, short videos, and creative messages in various languages.

**Conclusion**

Our core calling remains unchanged: to be faithful shepherds guiding people closer to Christ through word, sacrament, presence, and pastoral charity. While technology, including AI, can support this mission when used wisely, it can never replace genuine human presence, spiritual wisdom, and sacramental ministry, which define our vocation.

The words of our Lord guide us: “Be wise as serpents and innocent as doves” (Mt 10:16). This wisdom urges us to support valid technological advancements, enhance pastoral effectiveness while maintaining innocence, preserve the authenticity of ministry, and protect spiritual integrity.

The Church has always engaged thoughtfully with the signs of the times while remaining rooted in unchanging Gospel truths. AI represents one such sign—a powerful tool reflecting human

creativity while raising fundamental questions about intelligence, wisdom, and authentic relationships.

Our response must embody a typically Catholic approach: neither blind rejection nor full acceptance, but careful discernment guided by faith principles, Church tradition, wisdom, and a genuine concern for our people's spiritual well-being. Let us utilise these tools to serve human dignity, bolster pastoral ministry, and ultimately bring ourselves and our people closer to Christ.

May the Holy Spirit grant us wisdom and courage to navigate these technological realities while remaining faithful to our mission! May Our Lady, Seat of Wisdom, intercede as we seek to proclaim her Son to our contemporary world! May our Syro-Malabar tradition's patron saints guide us in preserving our heritage while engaging creatively with opportunities of the digital age!

During August, we gathered as fellow workers of the Eparchy to celebrate the feast of St John Maria Vianney. This occasion allowed us to reflect on our priesthood and to resolve to emulate St John Maria Vianney by administering the sacraments, especially the sacrament of reconciliation, with greater dedication. Let us utilise occasions such as the feast days of our parish patrons to strengthen the faith of our people. Next month, we will celebrate one of the major feasts of Our Blessed Mother, namely, the Nativity of Mother Mary. This feast offers a wonderful opportunity for us to deepen Marian devotion. Let us prepare our people well by encouraging them to observe the 8-day fast with greater earnestness. Let us also aim to make the celebration of this feast meaningful in our churches. Please remember to include the mission of the Church and the needs of our Eparchy in your daily prayers.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Mar Raphael Thattil

Major Archbishop of the Syro-Malabar Church

Prot.No. *0652/2025*

## ஆயர் பேரவைக்கு பின் வெளியிடப்பட்ட உயர் பேராயர் சுற்றுமடல்

சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ராஃபேல் தட்டில் தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்பு பணியின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறை மக்களுக்கும் எழுதுவதாவது

ஆண்டவராகிய ஈசோ மெசியாவின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**ஈசோ மெசியாவில் அன்பு சகோதரர் சகோதரிகளே,**

சீரோ மலபார் திருச்சபையின் முப்பத்திமூன்றாவது ஆயர் பேரவையின் இரண்டாம் கூடுகை 2025 ஆகஸ்டு 16 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை சபையின் தலைமை அலுவலகம் காக்கனாடு மவுண்ட் செயின்ட் தோமஸ் இல் நடைபெற்றது. சீரோ மலபார் திருச்சபையை மிக அன்பு செய்து அதன் வளர்ச்சிக்காக புது வழிகள் திறந்து வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறப்பையும்; கீழை திருச்சபையின் நோக்கத்தை பற்றி தெளிவான பார்வையுள்ள திருத்தந்தை பதிநான்காம் லியோ அவர்கள் அகில உலகத் திருச்சபையின் தலைவராக உயர்த்தப்பட்டதையும் நினைவு கூர்ந்து; ஆயர் பேரவையானது துவங்கப்பட்டது. நெருக்கடிகள் மற்றும் சவால்கள் அதிகமாக இருந்தாலும் நம் ஆண்டவர் நமக்கு தந்திருக்கின்ற திருப்பணியை சோர்வுறாமல் செய்ய திருச்சபைக்கு பொறுப்பிருக்கின்றது என்ற நோக்கத்தோடு ஆயர்கள் சிந்தனையிலும் ஜெபத்திலும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

**மத சுதந்திரம் இந்திய கலாச்சாரத்தின் முக்கிய நோக்கம்**

"வேற்றுமையில் ஒற்றுமை" என்ற கொள்கையின் அடிப்படையில், சாதி, மதம், இனம், அல்லது நிற வேறுபாடின்றி அனைவருக்கும் சுதந்திரம் வழங்கிய ஒரு கலாச்சாரம் நமது இந்திய நாட்டிற்கு உண்டு. நமது நாட்டின் ஒருமைப்பாட்டை சமரசம் செய்யாமல், ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்கள் விரும்பும் மதத்தை நம்பவும், பின்பற்றவும், பறைச்சாற்றவும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் சுதந்திரம் அளிக்கிறது. நூற்றாண்டுகளாகத்

திருத்தொண்டுப் பணி வழியாக சமூகத்தில் ஒடுக்கப்பட்டோரின் வளர்ச்சிக்காக சுகாதாரம், கல்வி மற்றும் சமூகத் துறைகளில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பங்களிப்புகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, அவற்றை வெறும் மதப் பிரச்சினையாக மாற்றும் வகுப்புவாத நிகழ்ச்சி நிரல்கள் மிகவும் வருத்ததுக்குரியவை. நாட்டை கட்டியெழுப்புவதில் கிறிஸ்தவர்களின் பங்கை மறந்து, நமக்கு எதிராக பாகுபாடு மற்றும் வெறுப்பு பிரச்சாரங்கள் நடத்தப்படுவதும், நமது குருக்கள், துறவிகள் மற்றும் பொது நிலையினர்களுக்கும் நடமாடும் சுதந்திரம் கூட பல இடங்களில் மறுக்கப்படுவது அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். மெசியாவின் மீதான அன்பினால் திருச்சபைக்கும் சமூகத்திற்குமாக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த அனைத்து திருப்பணியாளர்களையும் சீரோ-மலபார் திருச்சபை பெருமையுடன் நினைவுகூறுகிறது. கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கப் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? ஆயினும், நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம் (உரோ.8:35-37) என்ற இறைவார்த்தை நம்மை பலமூட்டுவதாக.

## தூய நற்கருணையின் அன்பில் வளருவோம்

கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியும் தூய நற்கருணை ஆகும். பாவிகளும் வலுவற்றவர்களுமான நமது உள்ளத்தில் நம் ஆண்டவர் எழுந்தருளி வருகின்ற விலைமதிப்பற்ற நிமிடங்களை தான் நாம் தூய நற்கருணையில் உணர்கிறோம். உயர்ந்த மதிப்போடும் நம்பிக்கையோடும் நாம் தூய நற்கருணை முன் வர வேண்டும். நமது சபையில் தூய நற்கருணை இகழ்ச்சிக்கு உட்படுத்தும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அது பலரை அதிகம் காயப்படுத்தியது. பலருடைய வீழ்ச்சிக்கு காரணமானது. அதற்கு மனித முறையில் பரிகாரம் செய்வது முடியாத காரியம் என்றாலும் தூய நற்கருணையின் நம்பிக்கையில் வளரவும் தூய நற்கருணைக்கு எதிராக ஏற்பட்டுள்ள இகழ்ச்சிக்கு பரிகாரம் செய்யவும் 2025 செப்டம்பர் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை சீரோ மலபார் திருச்சபை முழுவதுமாக ஒரு மணி நேரம் தூய நற்கருணை ஆராதனை நடத்த நான் கேட்டுக்கொள்கிறேன்.

## இணைந்து பயணிக்கும் திருச்சபை

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உரோமையில் வைத்து, 'இணைந்து பயணிக்கும் திருச்சபை' குறித்த, பேரவைகள் நடந்தன.

இவை, தற்காலத்தில் திருச்சபை பயணிக்க வேண்டிய முறையைப் பற்றி வரையறுக்கும் நிகழ்வுகளாக அமைந்தன. திருச்சபையின் மக்களாகிய நாம் அனைவரும், திருப்பயணிகளாக இருக்கின்றோம் என்பதைப் பற்றியத் தெளிவு அவசியம். அதன் வெளிப்பாடாக, திருச்சபையின் அமைப்புகள் யாவும், பிறரின் கருத்துகளுக்கு செவிமடுப்பனவாகவும், உரையாடலின் தளங்களாகவும் மாற்றப்பட வேண்டும். இதற்கான வழிமுறைகளைப் பற்றி, நடந்து முடிந்த (ஆகஸ்ட் 2025) சீரோ-மலபார் ஆயர் பேரவை பல்வேறு நிலைகளில் விவாதித்தது. அதன்படி, 'இணைந்து பயணிக்கும்' திருச்சபையாக மாற்றும் நடைமுறைகளில் ஒவ்வொரு மறைமாவட்டமும் ஈடுபட வேண்டும் என ஆயர் பேரவை கேட்டுக்கொண்டது. மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைவரிடமும் இயன்றவரை கலந்தாலோசித்து செயல்திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

**சபை சமூகத்தை வலுப்படுத்துதல்**

பல்வேறு சமூகங்கள் இணைந்து வாழும் ஒரு உபகண்டமாக இந்தியாவைப் பார்க்கலாம். அவ்வகையில், சீரோ-மலபார் சபை சமூகம் முன்னணிச் சமூகமாக பல்லாண்டுகளாகத் திகழ்ந்தது. ஆனால், தற்போது அதில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை, கடந்த ஆண்டு, பாலாவில் வைத்து நடைபெற்ற சீரோ-மலபார் உயர் மாமன்றமானது உணர்த்தியது. இதற்கு பல காரணங்கள் இருப்பினும், சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் வெளிநாடுகளில் குடிபுகும் இளைய தலைமுறையினர் ஆகிய இரண்டையும் முதன்மைப்படுத்தலாம். இக்குறைகளை போக்கிடவும், சீரோ-மலபார் சபை மக்களிடையே சமூக உணர்வை உருவாக்கவும் 2026 ஆண்டை 'சபையை வலுப்படுத்தும் ஆண்டாக' அனுசரிக்க இருக்கிறோம். அந்தந்த மறைமாவட்டங்கள் இதற்கான செயல்திட்டங்களை வகுக்க வேண்டும். சமூகத்தினரிடையே விழிப்புணர்வை உருவாக்கி, வலுப்படுத்தி, முன்னணிச் சமூகமாக மாற்றும் நோக்கம் இத்திட்டங்களில் வெளிப்பட வேண்டும். திட்டங்கள் புதுமை படைத்தனவாக மாறட்டும். இழந்த பெருமையை மீட்டு, ஆற்றல் மிக்க சமூகமாக உருவாக்கிட இவ்வாண்டு அனைவரையும் அழைக்கிறது.

**புதிய உயர் மறைமாவட்டங்கள்**

சீரோ மலபார்த் திருச்சபையின் வளர்ச்சியில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தி; கேரளாவிற்கு வெளியில் நான்கு புதிய உயர் மறைமாவட்டங்கள் உருவாக்குவதற்கும், ஷம்சாபாத் மறைமாவட்டத்தின் விரிவான எல்லைகளில் நற்செய்தி பணிக்கான வசதியை கருத்தில் கொண்டு பிற மறைமாவட்டங்களுடன் ஒன்றிணைத்து அவற்றின் எல்லைகளை புதுப்பிப்பதற்கும் திருத்தந்தையின்

அனுமதியுடன் நம்மால் முடிந்தது. பாரதம் முழுவதிலும் நற்செய்தி பணிக்கு அதிகாரம் பெற்றிருந்த மார் தோமா கிறிஸ்த்தவர்களின் பாரம்பரியமிக்க வரலாற்று சபையின் மிக முக்கியமான தடம் பதிப்பே இது எனலாம். புதிய உயர் மறைமாவட்டங்களாக உயர்த்தப்பட்ட ஹரிதாபாத், உஜ்ஜையின், கல்யாண், ஷம்சாபாத் போன்ற மறைமாவட்டங்களுக்கும் அவற்றின் ஆயர்களாக பொறுப்பேற்ற மார் குரியாக்கோஸ் பரணிகுளங்ர, மார் செபாஸ்டின் வடக்கேல், மார் செபாஸ்டின் வாணியபுரைக்கல், மார் பிரின்ஸ் ஆண்டணி பாணேங்நாடன், என்பவர்களுக்கு செபத்துடன் வாழ்த்துக்களை அர்ப்பணிக்கின்றோம்.

## திருச்சபையின் எதிர்நோக்கில் புது ஆயர்கள்

கடந்த எட்டு ஆண்டுகளாக சீரோ மலபார் திருச்சபையின் கூரியா ஆயராக பணியாற்றிய மார் செபாஸ்டின் வாணிய புரைக்கல் ஆயர் அவர்கள், கல்யாண் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராகவும் முதல் பேராயர் ஆகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆழமான ஆத்மீகவும் சகோதரத்துவமும் தீவிரமான இறைநம்பிக்கையும் மேய்ப்புபணியும் உள்ளடங்கிய மேதகு ஆயர் செபாஸ்டின் அவர்களுக்கு புதிய பணி வாழ்வு சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம். கடந்த 29 ஆண்டுகளாக கல்யாண் மறைமாவட்டத்தை வழிநடத்தி சீரோ மலபார் திருச்சபையின் ஆராதனை நூல்களை வடிவமைப்பதில் சிறந்த பங்களிப்பை வழங்கிய மார் தோமஸ் இலவனால் ஆயர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம். பெல்தங்நாடி மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்புக்குரிய அருள் தந்தை ஜெயிம்ஸ் பட்டேரில் அவர்களுக்கு இறை வேண்டலுடன் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம். க்ளரேஷன் துறவற சபை உறுப்பினரான இவரின் மறைபரப்பு ஆர்வமும் பணித்திறமையும் பெல்த்தங்நாடி மறைமாவட்டத்தை கூடுதல் வளர்ச்சி அடைய உதவட்டும் என வேண்டுகிறோம். கடந்த 26 ஆண்டுகளாக பெல்தங்நாடி மறைமாவட்டத்தை அதன் குழந்தை பருவத்தில் இருந்து வளரச் செய்து உயர்த்திய மார் லாரன்ஸ் முக்குழி ஆயர் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அடிலாபாத் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம் செய்யப்பட்டுள்ள மதிப்புக்குரிய அருள்தந்தை ஜோசப் தச்சாபரம்பத்து அவர்களுக்கு இதயம் நிறைந்த வாழ்த்துக்களை இறை வேண்டலோடு தெரிவிக்கின்றோம். CMI துறவற சபையின் உறுப்பினரான இவரின் தீவிரமான நம்பிக்கை வாழ்வும் அனுபவங்களும் அடிலாபாத் மறைமாவட்டத்திற்கு மிகுந்த தலைமைத்துவம் வகிக்க உதவுகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக நிறைவான மறைபரப்பு பணி வாழ்வால் அடிலாபாத் மறைமாவட்டத்தை வழிநடத்தி இப்போது ஷம்சாபாத் மறைமாவட்ட ஆயராகவும் பணி செய்கின்ற பிரின்ஸ் ஆண்டணி பாணேங்நாடன் ஆயர் அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றிகள்.

அன்புக்குரியோர்களே !

நிறைந்த பாரம்பரியமும் பண்பாட்டு செழுமையும் கொண்ட; தொன்மை வாய்ந்த மரபுகளை பின்பற்றும் சீரோ மலபார் திருச்சபை மக்களாகிய நாம் உலகளாவிய அளவில் கடைபிடிக்க வேணடியது நமது கடமையாகும். கீழை திருச்சபைகளின் இந்த யூபிலி கொண்டாட்ட வேளையில் திருதந்தை லியோ இவ்வாறு குறிப்பிடுகிறார் "கீழைத்திருச்சபைகள் உலகளாவிய கத்தோலிக்க திருச்சபைக்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பு மிகப்பெரியது. வழிபாட்டு முறைகளில் நிலவுகின்ற மறைபொருள் தன்மைகளை பின்பற்ற வேண்டியது இக்கால கட்டத்தின் கட்டாயம். மனிதர்களை அவர்களின் இயல்புத்தன்மையோடு ஏற்றுக்கொண்டு மீட்பின் மாட்சியை எடுத்துரைப்பதும் மனிதர்களின் பலவீனத்தை இறை மாண்பு எவ்வாறு ஏற்று கொள்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துகின்ற நமது வழிபாட்டு முறைகளை திரும்பபெற்று அதை நிலைநிறுத்த வேண்டும்".

மாறாக, நடைமுறை சாத்திய கூறுகள் இல்லையென்றோ நமது சூழலைக்காரணமாகக் கொண்டோ எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுத்தலாகாது. நமது திருச்சபையின் தனித்தன்மையையும் வழிபாட்டு முறைகளையும் கற்றுக்கொள்ள முயலும் போது அதன் பலன் சாத்தியமாகும். சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டதுதான் நமது திருச்சபையின் வரலாறு. உலகின் கடைஎல்லைவரை நற்செய்தி அறிவிக்க அழைக்கப்பட்ட நாம் ஓய்வின்றி உழைக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். இறை வார்த்தை மற்றும் அருளடையாளங்கள் மூலம் ஆற்றல் பெற்று ஒன்றிப்பில் வளர்ந்து திருச்சபையின் கடமைகளை நிறைவேற்ற நாம் முற்படுவோம்.

நமது அன்னையாம் தூய கன்னிமரியா புனித யோசேப்பு மற்றும் புனித தோமா மற்றும் அனைத்து புனிதர்கள் மறைசாட்சிகள் ஆகியோரின் பரிந்துரையும் ஆசீரும் நம்முடனும் நம் பணிவாழ்வோடும் இருக்கட்டும்.

இச்சுற்றுமடல் காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸில் ஆகஸ்ட் 29, 2025 அன்று வழங்கப்பட்டது.

மார் ராஃபேல் தட்டில்,

சீரோ-மலபார் சபையின் உயர்பேராயர்

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12, Thuckalay P.O. Kanyakumari Dt. 629 175, Tamil Nadu, India

# Circular letter No/GR 61/2025

**ஈசோமெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே, துறவறத்தாரே, இறைமக்களே,**

கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றாகவும் உச்சியாகவும் விளங்குவது திருப்பலி. கிறிஸ்தவ மீட்பின் மறையுண்மையை சொந்தமாக்கி; அதை வாழ்வாக்கும் கிறிஸ்தவர்களின் வாழ்வு பலியாகத் திகழ்கிறது என்பதே உண்மை. இந்நம்பிக்கையில் வேரூன்றி தங்கள் கருத்துக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வழக்கம் இறைமக்களிடையே நிலவுகிறது. சொந்தக் கருத்துக்களுக்காகவும் சிறப்பு வேண்டுதலுக்காகவும் பெயர்களை பதிவு செய்து நேர்ச்சையாக பணம் கொடுக்கும் முறை நிலவுகிறது. குறிப்பாக, நன்றித் திருப்பலி, இறந்தோருக்கெனத் திருப்பலி, நோய் நீங்க, மற்றும் நல்ல வேலை கிடைக்க திருப்பலி என கத்தோலிக்கர்கள் இதைச் செய்வதுண்டு. இதற்காக அவர்கள் அருட்தந்தையர்களை அணுகி பணம் கொடுத்து பெயர்களை பதிவு செய்கிறார்கள். இதன் பயன் இருவிதங்களில் அமைகிறது. முதலாவதாக, திருச்சபையின் பொதுநலனுக்கான இறைமக்களின் பங்களிப்பாக இருக்கிறது. இரண்டாவதாக, நேர்ச்சைப் பணம் கொடுப்பவர் ஆன்ம வாழ்வில் முதிர்ச்சி அடைகிறார்.

இப்படி தங்களுடைய கருத்துக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக கொடுக்கும் தொகையில் சில மாற்றங்கள் நம்முடைய மறைமாவட்டத்தில் ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கவே இம்மடலை நான் எழுதுகிறேன். 2025, ஜூலை 6 முதல் 10 ஆம் தேதி வரை, தமிழக ஆயர் பேரவையின் கூட்டம் பூண்டியில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் வைத்து, நேர்ச்சைத் தொகையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. இதன் அடிப்படையில் நம்முடைய மறைமாவட்டத்தில் வருகின்ற செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் கீழ்வரும்

மாற்றங்கள் ஏற்படுத்தப்பட இருக்கிறது.

1. சதாராணத் திருப்பலி - ரூ. 150
2. ஆடம்பரத் திருப்பலி - ரூ. 200
3. இராசைத் திருப்பலி - ரூ. 1,000
4. கிரகோரியன் திருப்பலி - ரூ. 6,000
5. சிறிய ஒப்பீஸ – கோவிலில் - ரூ. 30
6. சிறிய ஒப்பீஸ – கல்லறையில் – ரூ 50

திருவிழா நாட்களில், மேல் குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பணத்தை நேர்ச்சையாக பெறும் வழக்கம் உண்டு. கூடுதலாகப் பெறப்படும் பணம் திருவிழாவின் செலவுகளுக்காக பயன்படுத்துவதுண்டு. கூடுதலாகப் பெறப்படும் தொகையை செலவுகளுக்காகப் பயன்படுத்தலாம். ஆனால், பெறப்பட்ட திருப்பலியின் எண்ணிக்கைக்கு உரிய தொகையை திருப்பலி நேர்ச்சப்பணமாக ஒதுக்க வேண்டும். திருப்பலியின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவற்றை பங்குத்தந்தை வழியாக, மறைமாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

திருச்சபையின் பொதுநலனில் பங்கேற்று அதனுடைய வளர்ச்சிக்கு உதவுகின்ற அரிய வாய்ப்பாக திருப்பலி நேர்ச்சைப் பணம் விளங்குகிறது. கைம்பெண்ணின் செப்புக்காசு ஈசோவுக்கு ஏற்புடைய காணிக்கையாக மாறியது என்பதை அறிவோம். ஆகையால் நீங்கள் அளிக்கும் சிறு தொகை கடவுளுக்கு ஏற்புடையதாக மாறி அளப்பரிய நன்மைகளை உங்கள் வாழ்வில் கொணரும். திருப்பலி வழியாக கிடைக்கும் சொல்லற்கரிய அரும்பெரும் கொடைகள் உங்கள் வாழ்வில் நிரம்ப கிடைக்க நான் உங்களுக்காக வேண்டுகிறேன். கடவுள் உங்களையும் உங்கள் குடும்பங்களையும், உங்களுடைய எல்லா முன்னெடுப்புகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

ஈசோ மெசியாவில் அன்புடன்

**ஆயர் இல்லம்**

**27.08.2025**

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**

CATECHISM
மறைக்கல்வி

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு.**
**(உரோமையர் 10:17 )**

## ஊக்குவிப்பாளர்களின் கூடுகை



2025 -2026 ஆம் மறைக்கல்வி ஆண்டு செயல்படுத்த வேண்டிய புதிய செயல் திட்டங்கள் பற்றி கலந்துரையாடவும் புதிய பார்வையிடுதல் குறித்து தேவையான ஆலோசனைகள் வழங்கவும் ஊக்குவிப்பாளர்களின் கூடுகை 2025 ஜூலை 12 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் 6.30. மணி வரை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது . இக்கூடுகையின் போது இயக்குநர் அருட்தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்று: இந்த வருடம் செயல்படுத்த வேண்டிய புதிய செயல் திட்டங்கள் முன் வைத்து கலந்துரையாடப்பட்டது. மேலும் ஊக்குவிப்பாளர்களுக்கு மிகவும் பயன்படும் வண்ணமாய் இயக்குநர் அருட்தந்தை அவர்கள் மறைக்கல்வியின் நான்கு தூண்களை மையப்படுத்தி ஊக்குவிப்பாளர்கள் சிறந்து விளங்க வேண்டிய கருத்துக்களை மையப்படுத்தி வகுப்பை நடத்தினார். மேலும் இக்கூடுகையின் போது இந்த வருடம் மறைக்கல்வி நிலையங்களை முதல் பார்வையிடுதலுக்கான படிவமும் நியமன நகலும் வழங்கப்பட்டது.

## மறைக்கல்வி ஆண்டுவிழா

2024-2025 –ஆம் ஆண்டின் மறைக்கல்வி ஆண்டுவிழா மற்றும் யுபிலி கொண்டாட்டம் 2025 ஆகஸ்ட் 10 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் நமது ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும் குருகுல முதல்வர். பேரருட்தந்தை. தோமஸ் பௌவ்வத்துபறம்பில் மற்றும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட அருட்தந்தை. சதீஸ் குமார் ஜாய் மற்றும் இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக பளுகல் மறைக்கல்வி ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். அண்ணிக்கரை மாணவர்கள் விவிலியம் வாசித்து செபம் செய்தார்கள். தொடர்ந்து மாங்கரை மறைக்கல்வி மாணவிகள் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். விழாவின் இடையிடையே மஞ்சாலுமூடு மாணவிகளின் குழுப்பாடலும், ஆறுகாணி ஆசிரியர்களின் குழுப்பாடலும், முழுக்கோடு, சூசைபுரம் மாணவிகளின் குழு நடனங்களும், களியல் மறைக்கல்வி மாணவர்களின் யூபிலி Tableau, சூசைபுரம் மாணவனின் விவிலிய இறை வார்த்தை சொல்லுதல், மாலைக்கோடு மற்றும் வாறுதட்டு மாணவர்களின் சொற்பொழிவும் கண்களை கவரும் வண்ணமாய் அமைந்தன. வயலின்கரை மற்றும் சீனிவிளை மறைக்கல்வி மாணவ மாணவிகள் கலைநிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள். மேலும் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி 25, 40 மற்றும் 50 வருடங்கள் யூபிலி கொண்டாடும் ஆசிரியர்களுகளை ஊக்குவிப்பாளர் திரு. சோணிக் ரீகன் அவர்கள் வாழ்த்தி அறிமுகம் செய்து வைக்க: ஆயர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. நமது ஆயர் அவர்கள் தமது உரையில் அடுத்த தலைமுறைக்கு விசுவாச பயிற்சி அளிப்பது



மறைக்கல்வியின் முக்கியமான நோக்கமாகும் என்றும் நமது மறைமாவட்டத்தில் மறைக்கல்விப்பணி மிகச்சிறப்பாக நடைபெறுகிறது என்றும் கூறினார். யூபிலி கொண்டாடும் ஆசிரியர்களையும் வாழ்த்தினார். மேலும் இவ்விழாவின் போது இவ்வருடத்திற்கான மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கையேடு நமது குருகுல முதல்வர். பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்களால் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து சீரோ மலபார் திருச்சபை இணையதளம் வழியாக நடத்திய Sacrements and Sacramentals of the Syro Malabar Church அதனுடைய சான்றிதழும் Mission quest 2024; மறைமாவட்ட விவிலிய வினாடி வினாப் போட்டி மற்றும் போட்டித்தேர்வில் முதலிடம் இரண்டாமிடம் மூன்றாமிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் சான்றிதழும் அருட்தந்தை. சதீஸ் குமார் ஜாய் மற்றும் அருட்தந்தை. டோஜி பறம்பில் பறம்பில் அவர்களாலும் வழங்கப்பட்டது. முதலிடம் இரண்டாமிடம் மூன்றாமிடம் பெற்ற மறைக்கல்வி நிலையங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சுழற்கோப்பைகள் ஆயர் அவர்களாலும் வழங்கப்பட்டது. தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற இறுதியில் சீரோ-மலபார் கீதத்துடன் ஆண்டு விழா இனிதே முடிவுற்றது. பின் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி இந்த வருடம் வெள்ளி விழா, ரூபி விழா மற்றும் பொன்விழா கொண்டாடும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும். இந்த வருடம் வெள்ளி விழா கொண்டாடும் ஆசிரியர்கள் பெயர் விவரம் பின்வருமாறு

| S.No | Name | years | Parish |
|---|---|---|---|
| 1 | Sr.Alphonse CMC | 25 | Pilankarai |
| 2 | Sr.Anns Maria CMC | 25 | Kalluvilai |
| 3 | Sr. Elsy Kurian SH | 40 | Palukal |
| 4 | Sr. Jaisy FCC | 40 | Kattathurai |
| 5 | Sr. Tessa Maria SH | 50 | Anamugham |
| 6 | Sr.Tessy George SH | 40 | Anamugham |

| | | | |
|---|---|---|---|
| 7 | Sr. Reji Mathew FCC | 40 | Thadikkarakonam |
| 8 | Sr. Elsit SABS | 25 | Fathimapuram |
| 9 | Sr.Reetha Francis | 43 | Palukal |
| 10 | Mr. Jose Y | 25 | Palukal |
| 11 | Mr. Lawrance M | 25 | Athencode |
| 12 | Mr.Shaji DP | 25 | Mukkuttukal |
| 13 | Mr. Vincent Raj | 25 | Munchirai |
| 14 | Mrs. Flory Amala | 25 | Pallikkonam |
| 15 | Mrs.Helen Saroja | 25 | Muzhucode |
| 16 | Mrs. Lilly Pushpam | 40 | Kaliyal |
| 17 | Mrs. Kavitha | 25 | Pallikkonam |
| 18 | Mrs. Mary Hilda | 25 | Pallikkonam |
| 19 | Mrs. Mary Princila | 25 | Padanthalumoodu |
| 20 | Mrs. Saraswathi | 40 | Malaicode |
| 21 | Ms. Shiny Philip | 25 | Arukany |
| 22 | Mrs. Sudha | 25 | Palukal |

**BEST SUNDAY SCHOOL**

**SECTION A**

| SL.NO | SUNDAY SCHOOL | POINTS | RANK |
|---|---|---|---|
| 1 | St. Little flower Manjalumoodu | 634 | 1 |
| 2 | St. Xaviers, Varuthattu | 578 | 2 |
| 3 | Jaya Matha, Nithiravilai | 543 | 3 |
| 4 | Holy Family, Mukkuttukal | 538 | 4 |
| 5 | St. Thomas , Muzhucode | 533 | 5 |

**SECTION B**

| SL.NO | SUNDAY SCHOOL | POINTS | RANK |
|---|---|---|---|
| 1 | Sacred Heart, Pallikkonam | 575 | 1 |
| 2 | St. Little Flower , Pilankalai | 554 | 2 |
| 3 | Lorretto Matha, Pilankarai | 526 | 3 |
| 4 | Sacred Heart, Padanthalumoodu | 504 | 4 |
| 5 | St. Martin De- pores, Kazhuvanthittai | 474 | 5 |

**SECTION C**

| SL.NO | SUNDAY SCHOOL | POINTS | RANK |
|---|---|---|---|
| 1 | Christ The King , Paraicode | 517 | 1 |
| 2 | Holy Family , Arukany | 497 | 2 |
| 3 | St. Thomas, Pathukany | 495 | 3 |
| 4 | Fathima Matha , Fathimapuram | 494 | 4 |
| 5 | St. Pauls, Thettiyode | 473 | 5 |

**BEST SUNDAY SCHOOL TEACHERS**

| SL.NO | SUNDAY SCHOOL | POINTS | RANK |
|---|---|---|---|
| 1 | Sacred Heart, Pallikkonam | 372 | 1 |
| 2 | St. Little flower Manjalumoodu | 370 | 2 |
| 3 | St. Little flower , Pilankalai | 368 | 3 |
| 4 | Holy Family, Mukkuttukal | 359 | 4 |
| 5 | Lorretto matha, Pilankarai | 353 | 5 |

## தலைமையாசிரியர்களின் கூட்டம்

நமது மறைமாவட்ட மறைக்கல்வியின் தலைமையாசிரியர்களின் கூட்டம் 2025; ஆகஸ்ட் 23 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை KKSSS அலுவலக அரங்கில் இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்களின் தலைமையில் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை. அபிலாஷ் சேவியர் அவர்கள் மறைக்கல்வி நிலையங்களில் மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக இந்த வருடம் புதிதாக செயல்படுத்த வேண்டிய செயல்திட்டங்கள் பற்றி விளக்கி



கூறினார். இக்கூட்டத்தின் போது செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி கூறினார். இக்கூட்டத்தின் போது ஆசிரியர் கையேடு அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து தலைமையாசிரியர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து நன்றியுரை மற்றும் ஆசி செபத்துடன் கூட்டம் மாலை 4.00 மணியளவில் இனிதே முடிவுற்றது. பின்னர் அனைவருக்கும் தேனீர் விருந்து வழங்கப்பட்டது.

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***

***இயக்குனர்***

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை ( லூக் 1:37)**

தூய கன்னி மரியாவின் விண்ணேற்பு திருவிழாவை முன்னிட்டு ஆகஸ்டு மாதம் நமது குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்ட செயல்பாடு (activity) குழுப்பாடல் (மாதாபாடல்) ஆகும். ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு குழுப்பாடல் இடம் பெற்றன. இதில் ஏராளமான குழந்தைகள் பங்கெடுத்தனர். மாதாவின் வேடமணிந்தும் கலந்து கொண்டனர். மாதாபாடல் பாடி வீடியோ எடுத்து வட்டார ஆனிமேட்டர்ஸ்க்கு அனுப்பி வைத்தனர். அதனை அவர்கள் மறைமாவட்ட பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தனர். நமது குழந்தை ஈசோ இயக்க வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தருகின்ற அனைத்து ஆனிமேட்டர்ஸ் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் நன்றி.

**இயக்குனர்**
**அருள்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்**

## அருட்தந்தையர்களின் வருடாந்திர தியானம் 2025

தேதி: 05-10 அக்டோபர் 2025

இடம்: சங்கமம்




### திருமண ஆயத்தப் பயிற்சி

திருமணத்திற்கு தயாராகும் இளையோர்களுக்கான திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பு ஆகஸ்ட் 08 மற்றும் 09 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் 16 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

### மறைவட்ட கூட்டம்

ஆகஸ்ட் 02 மதியம் 2.30 மணியளவில் நித்திரவிளை மறைவட்ட ஆலயத்தில் வைத்து மறைவட்ட இயக்குநர் பேரருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் தலைமையில் மாதர் ஜோதிஸ் மறைவட்ட கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டனர்.

### மறைமாவட்ட பொறுப்பாளர்கள் தேர்தல்



17 ஆம் தேதி, மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளையில் வைத்து ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து பங்குகளிலிருந்தும் பொறுப்பாளர்கள் மற்றும் ஆனிமேட்டர்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் 2025-26 ம் ஆண்டிற்கான செயல்வளர் போட்டியின் செயல்திட்டாங்கள் ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டது. பின்னர் அடுத்த

இரண்டு வருடத்திற்கான மறைமாவட்ட பொறுப்பாளர்களின் தேர்ந்தேடுப்பு வாக்கு பதிவு மூலம் நடைபெற்றது. அனைத்து மறைவட்ட தலைவர்களும் இதில் போட்டியிட்டனர். அதில் திருமதி ஜூலியட் சுனில் தெற்றியோடு பங்கை சார்ந்தவர்கள் மறைமாவட்ட தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை தலைவராக முழுக்கோடு பங்கை சேர்ந்த திருமதி ஷைனி சிபு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து அரைமணி நேரம் சுகாதார துறை சார்பாக வகுப்பு நடைபெற்றது.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

---

# உறவிய மலர்

---

கிறிஸ்து யூபிலி ஆண்டு கொண்டாட்டத்தின் சிறப்பு நிகழ்வாக மறைமாவட்டத்திலுள்ள உறவிய பொறுப்பாளர்களுக்கான தியானமானது இரண்டு மறைவட்டங்கள் இணைத்து நடைபெற்று வருகிறது.

## ஆறுகாணி, தக்கலை - பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்ட உறவிய தியானங்கள்

ஆறுகாணி மறைவட்டத்திலுள்ள உறவிய பொறுப்பாளர்களுக்கான தியானம் 2025 ஆகஸ்ட் 23 சனிக்கிழமை, நெட்டா புனித தோமையார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. 45 பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டனர். சூசைபுரம் மற்றும் தக்கலை - பிலாங்காலை மறைவட்ட பொறுப்பாளர்கள் தியானம் ஆகஸ்ட் 30 சனிக்கிழமை, சூசைபுரம் புனித அல்போன்சா கலைக் கல்லூரி வளாகத்தில் வைத்து நடைபெற்றது. 120 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இத்தியானம் 9.00 மணிக்கு துவங்கி மதியம் 1.30 மணிக்கு முடிவடைந்தது. இதில் செபமாலை, துவக்கவிழா, இறைப்புகழ்ச்சி, தியான உரை, நற்கருணை ஆராதனை மற்றும் சிறப்பு வகுப்புகளும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# பொது நிலையினர் பணிக்குழு

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் கலந்துரையாடல் கூட்டம் 2025 ஆகஸ்ட் 19, நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண் சே.ச அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சியாளர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் முன்னிலையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. சிறுபான்மையினர்களான கிறிஸ்தவ முஸ்லிம் பௌத்த சமண மத நிர்வாகிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். சிறுபான்மையினருக்கான ஏராளமான பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டு உடனடி தீர்வு காணப்பட்டது. நமது தக்கலை மறைமாவட்ட பொது நிலையினர் பணிக்குழு சார்பாக தலைவர் Adv.N.தனசிங் மற்றும் இயக்குனர் தந்தை. செபி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டமானது சிறுபான்மையினரின் வலிமையை மெருகூட்டும் விதமாக அமைந்தது.



பொதுநிலையினர் பணி குழுவின் ஆலோசனைக் கூட்டம் மற்றும் செயல் விளக்க கருத்தரங்கு 3-8- 25 மதியம் 2.30 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் நாகர்கோவில் அல்போன்சா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. நமது பொதுநிலையினர் பணிக்குழுவின் வேலைகள், சந்தேகங்கள், அமைப்பு நிர்வாகம் முதலியவற்றைப் பற்றிய சந்தேகங்களை தீர்க்கும் நோக்கத்தில்

கேரளாவில் இருந்து நம்மை சந்திப்பதற்காக கேரளா கத்தோலிக்க காங்கிரஸ் இயக்க நிர்வாகிகளான திரு ஜோஸ் குட்டி, திரு பென்னி, ஆகியோர் வருகை தந்தார்கள். தக்கலை மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொதுநிலையினர் பணி குழு நிர்வாகிகள் இயன்ற அளவு கலந்து கொண்டார்கள். நமது சங்கம் திறம்பட செயல்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் பொதுநிலையினர் பணி குழு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் பொதுநிலையினர் பணி குழு தலைவர் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் துவக்க உரையாற்றினார்கள். கேரளாவில் கத்தோலிக்க காங்கிரஸ் என அழைக்கப்படும் பொது நிலையினர் பணிக் குழுவானது எவ்வாறு செயல்படுகிறது, அவர்களுடைய பணிகள் என்ன, தேசிய அளவில் நம்முடைய சங்கத்தின் செயல்பாடுகள் என்ன, என பல்வேறு கருத்துக்கள் குறித்து கேரள கத்தோலிக்க காங்கிரஸ் நிர்வாகிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு நமது இயக்கத்தின் புது நிர்வாக இயக்குனர் அருள் தந்தை செபி அவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியில் நமது இயக்க கொடி அறிமுகப்படுத்தப்பட்டு அந்த கொடியானது மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு தலைவர் Adv.N. தனசிங் அவர்களிடம் வழங்கப்பட்டது. அதேபோன்று கத்தோலிக்க காங்கிரஸினுடைய செயல்முறை கையேடு மலையாள பிரதி ஆயர் அவர்களிடம் கேரள கத்தோலிக்க காங்கிரஸ் நிர்வாகிகளால் வழங்கப்பட்டது. இறுதியாக பேசிய ஆயர் அவர்கள் நமது பொதுநிலையினர் பணிக்குழு இயக்கமானது கிறிஸ்தவ சமூகத்திற்கு அரணாகவும் கேடயமாகவும் திகழ வேண்டும் என்ற முக்கிய கருத்தை முன் வைத்தார்கள். இறுதியாக Adv.ராஜா எரிக் காட்வின் அவர்கள் நன்றி கூற கூட்டமானது ஆயரின் இறுதி ஆசியுடன் மூன்று முப்பது மணிக்கு இனிதே நிறைவுற்றது.

Adv.N.தனசிங்

**பொதுநிலையினர். பணிக்குழு தலைவர்,**

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

## ஓணக் கொண்டாட்டம்

ஒருநுறாம் வயல், சுயஉதவி குழுக்களின் சார்பில் ஓணப்பண்டிகை ஆகஸ்ட் 25 தேதி கொண்டாடப்பட்டது. ஓண நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக ஆறுகாணி, காவல் ஆய்வாளர் திரு. வில்சன் அவர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தார். அவர் தனது உரையில், நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் ஓணம் அடையாளப்படுத்தும் கேரளாவின் வளமான கலாச்சார பாரம்பரியம் குறித்துப் பேசினார். விழா பிரதிநிதித்துவப்படுத்தும் இரக்கம் மற்றும் ஒற்றுமையின் மதிப்புகளை நிலைநிறுத்த அனைவரையும் அவர் ஊக்குவித்தார். நிகழ்வில் EduCare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி செல்வா மேரி. நிதி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி ஆஷா மற்றும் ஊர்தலைவர் திரு. அனில் குமார் உள்ளிட்ட விருந்தினர்கள் விழா வாழ்த்துக்களை தெரிவித்தனர். அவர்களின் வார்த்தைகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. கலாச்சார நிகழ்ச்சி கண்களுக்கு விருந்தாக அமைந்தது. குழுக்களை சேர்ந்த திறமையான நபர்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். பாரம்பரிய வெள்ளை மற்றும் தங்க நிற புடவைகளில் பெண்கள் நிகழ்த்திய அழகிய திருவாதிரகளி நடனம், கூட்டத்தினரை மகிழ்வித்தது. மகாபலி மன்னரின் கதையையும், வருகையையும் விவரிக்கும் ஒரு வசீகரமான நாடகம், திருவிழாவின் புராண வேர்களை அனைவருக்கும் நினைவூட்டியது. கதை சொல்லும் அமர்வுகள் ஓணப்பாட்டு (ஓணம் பாடல்கள்) இன்னிசை ஆகியவை இடம் பெற்றன. கொண்டாட்டத்தின் இறுதிப் பகுதியாக பாரம்பரிய சைவ விருந்தான ஓணசத்யா நடைபெற்றது. இதில் ஒருநுறாம் வயல், குழுவை சார்ந்த 80 மேற்பட்டவர்கள் கலந்து கெண்டனர். KKSSS களப்பணியாளர் திருமதி.ஷோபா அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்கள்.

## விண்ணைத்தொடு குழு (VCC) விருது வழங்கும் விழா

ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி, கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் CTWWC செயல் திட்டத்தின் சார்பாக, விண்ணைத்தொடு குழுவின் (VCC) விருது வழங்கும் விழா நடைபெற்றது. "குழந்தைகள் பாதுகாப்பான மற்றும் பராமரிப்பான குடும்ப சூழலில் வளர்வதை உறுதி செய்தல்" என்னும் CTWWC செயல் திட்டத்தின் நோக்கத்தை உள்வாங்கிக் கொண்டு தக்கலை மறை மாவட்டத்தின் கீழ் செயல்படும் 17 பங்கு தளங்கள், தங்கள் கிராமத்தில் வளரும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை கண்காணிப்பது தங்களது கடமை என்பதை உணர்ந்து, தீர்மானம் நிறைவேற்றினர்கள். இந்த திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த, பங்கு தந்தையர்களை கௌரவிக்கும் விதமாக இந்த



விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர். அருட்தந்தை மகேஷ் ஆன்றணி அவர்கள் முன்னிலை வகித்தார். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் தலைவரும், தக்கலை மறைமாவட்டத்தின் குருகுல முதல்வருமான பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்து பரம்பில் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். அப்போது விண்ணைத் தொடு திட்டம் சிறப்பாக செயல்படுபவதாகவும் திட்டம் துவங்கப்பட்ட காலத்தில் செயல்படும் முறைகளில் தனக்கு தனிப்பட்ட விதத்தில் சந்தேகம் இருந்தது எனவும் தற்போது இத்திட்டம் அனைத்து மறைமாவட்டங்களைவிட கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சிறப்பாக செயல்படுகிறது. விண்ணைத்

தொடு திட்டம் தற்போதைய கால கட்டத்தில் தேவையான ஒன்று எனவும் கூறினார். தொடர்ந்து, கத்தோலிக்க நிவாரணச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் திரு. செந்தில்குமார் குருநாதன் மற்றும் ஆலோசகர், பேரருட்தந்தை செலஸ்டின் தேவசாயம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பின்னர் CTWWC செயல் திட்டத்தில் பணியாற்றிய தங்களது அனுபவங்களை பேரருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல், மற்றும் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் ஆகியோர் பகிர்ந்து கொண்டனர். விழாவின் முக்கிய நிகழ்வாக, விண்ணைத்தொடு குழு உருவாக்கத்தில் பங்கு பெற்ற பங்கு தந்தையர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் 15க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் மற்றும் 10க்கும் மேற்பட்ட திட்ட முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## ஆரி பயிற்சி வகுப்பு

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக 30 நாள்களுக்கான ஆரி பயிற்சி வகுப்பு ஆகஸ்ட் 1 ஆம் தேதி கிறிஸ்துராஜபுரத்தில் தொடங்கியது. இதனை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர். அருட்தந்தை மகேஷ் ஆன்றணி மற்றும் அருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்தனர். பயிற்சியாளர் திருமதி விஜய குமாரி தலைமையிலான ஆரி வேலை வகுப்பு நடைபெற்று வருகிறது. இந்த வகுப்பு மொத்தம் 16 மாணவர்களைக் கொண்ட 30 நாள் திட்டமாகும். சங்கிலித் தையல்கள் மற்றும் பிற வடிவங்களை உருவாக்க ஒரு சிறப்பு ஊசியைப் பயன்படுத்தும் கை எம்பிராய்டரி வகை ஆரி எம்பிராய்டரியின் சிக்கலான கலையை கற்பிப்பதில் பாடத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

இந்த பாரம்பரிய கைவினைப்பொருளில் தேர்ச்சி பெறுவதில் குழு உறுப்பினர்கள் மிகுந்த உற்சாகத்தையும் அர்ப்பணிப்பையும் காட்டுகிறார்கள். குழு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதோடு செய்முறை வகுப்பையும் பகிர்ந்து கொள்கிறார்கள். இந்த முயற்சி, மாணவர்கள் தனிப்பட்ட திட்டங்களுக்கு அல்லது சொந்தமாக சிறு தொழில்களைத் தொடங்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை வழங்குகிறது.

***செயலர்,***
***அருட்தந்தை மகேஷ்***

# நலவாழ்வுபணிக்குழு

## போதை விழிப்பணர்வு முகாம்

மறைமாவட்ட நலப்பணிக்குழு, தக்கலை மறைமாவட்டம் சார்பில் ஆகஸ்ட் 17, 2025 அன்று கல்லுவிளை, KKSSS அரங்கத்தில் போதைப்பொருள் போதை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சமூக நலன் குறித்த புகழ்பெற்ற நிபுணரான கோட்டர் மறைமாவட்டத்தை சார்ந்த அருட்சகோதரி. கிறிஸ்டினின் சி.டி.சி தலைமையில் நடைபெற்றது. அப்போது ஆரம்பகால பயன்பாட்டிலிருந்து தற்போது வரை போதையின் பல்வேறு நிலைகளை எடுத்துரைத்து, விரிவான மற்றும் ஈர்க்கக்கூடிய உரையை அவர் நிகழ்த்தினார். போதைப்பொருள் தீமையை விளக்கி ஆழமான உடல், உளவியல் மற்றும் சமூக விளைவுகளை, தனிநபர் மீது மட்டுமல்ல. அவர்களின் முழு குடும்ப அமைப்பிலும் அவர் விளக்கினார். ஆரம்பகால எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறிந்து, மீள்வதற்கு ஆதரவான சூழலை வழங்குவதில் பெண்களின் முக்கிய பங்கை அருட்சகோதரி கிறிஸ்டினின் சி.டி.சி வலியுறுத்தினார். பாதிக்கப்பட்ட நபரை களங்கப்படுத்தாமல் தொடர்பு, தலையீடு மற்றும் தொழில்முறை உதவியை நாடுவதற்கான நடைமுறை உத்திகளை அவர் விவாதித்தார். உரையைத் தொடர்ந்து கேள்வி பதில் அமர்வு நடைபெற்றது. இதில் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்று, தங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் நிஜ வாழ்க்கை சூழ்நிலைகள் குறித்து ஆலோசனைகளையும் பெற்றனர். பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் கூட்டுப் பொறுப்புணர்வை வளர்ப்பதிலும் இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதில் மதர் ஜோதிஸ் இயக்கத்தை சார்ந்த 50 மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

## உடல் உறுப்பு தானம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் தக்கலை மறைமாவட்ட நலவாழ்வுப் பணிக்குழு இணைந்து கல்லுவிளை, KKSSS அரங்கத்தில் வைத்து ஆகஸ்ட் 16 தேதி உடல் உறுப்புதானத்தின் முக்கிய தேவை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடை பெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி, அவர்கள் தலைமை தாங்கினார். அப்போது உறுப்பு தானத்தின் உயிர்காக்கும் திறனை எடுத்துரைக்கும் ஒரு ஆர்வ மிக்க தொடக்க உரையை நிகழ்த்தினார். ஒவ்வொரு நன்கொடையாளரின் முடிவும் பல உயிர்களை மாற்றும் சக்தியைக் கொண்டுள்ளது, இது ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சிக்கான இரண்டாவது வாய்ப்பை வழங்குகிறது என்பதை அவர் வலியுறுத்தினார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சிறுநீரக கொடையாளி அருட்தந்தை பீட்டர். சிறுநீரக தானம் குறித்த தனது அனுபவங்களையும் நுண்ணறிவுகளையும் பகிர்ந்து கொண்டார். ஒரு கருணைச் செயலின் ஆழமான தாக்கத்தைப் பற்றி அவர் பேசினார். உறுப்பு தானம் என்பது சமூக மற்றும் மத எல்லைகளைத் தாண்டிய ஒரு உன்னதமான மற்றும் தன்னலமற்ற பரிசு என்பதை வலியுறுத்தினார். அவரது உரை தன்னார்வலர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து, அரவிந்த் கண் மருத்துவமனை கண்தான ஒருங்கிணைப்பாளர் திருமதி மருதம்மாள், கண் தானம் குறித்த ஒரு அறிவூட்டும் அமர்வை வழிநடத்தி பேசும்; போது கண் தானம் என்பது ஒருவர் இறந்த பிறகு கண்களை தானம் செய்யும் செயலாகும். இந்த செயல்முறையின் மூலம் கருவிழி பார்வை இழந்தவர்கள் மட்டுமே பயனடைய முடியும், பிற பார்வையற்றவர்கள் அல்ல. இது சமூகத்தின் நலனுக்காகவும் தன்னார்வமாகவும் செய்யப்படுகிறது. ஒரு நபரின் கண் தானம் மூலமாக நான்கு பார்வையற்றவர்களுக்கு பார்வை பெற உதவும் என கூறினார். நலவாழ்வுப் பணிக்குழு மறைமாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் திரு. எட்வின்சன் நன்றி கூறினார். நலப்பணிக்குழு தன்னார்வலர்கள் சுமார் 65 நபர்கள் கலந்து கொண்டனர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## புனித ஜான் மரியா வியானி திருநாள் கொண்டாட்டம்

அருட்தந்தையர்களின் பாதுகாவலர் புனித ஜான் மரியா வியானியின் திருநாள், 2025 ஆகஸ்ட் 04 முக்கூட்டுக்கல் புனித மேரிஸ் இளங்குருமடத்தில் வைத்து மறைமாவட்டத்தின் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் பங்கேற்புடன் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியானது காலை 10:00 மணிக்கு அருட்தந்தையர்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு இடையே பாரம்பரிய கைப்பந்து போட்டியும் நடைபெற்றது. இளங்குருமடத்தின் சகோதரர்கள் வெற்றி கோப்பையை கைப்பற்றினர். தொடர்ந்து அருட்சகோதரர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சிறுகலாச்சார நிகழ்ச்சியும் இடம்பெற்றது. பொதுக்கூட்டம் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடந்தது.

## நலவாழ்வுப் பணிக்குழுப் பயிற்சி முகாம்

2025 ஆகஸ்ட் 12-13 அன்று TNBC நலவாழ்வு குழு சார்பாக இருநாள் பயிற்சி முகாம், திருச்சியில் நடைபெற்றது. பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டமாக இக்கருத்தரங்கு அமைந்தது. இதில் 120 அர்ப்பணிப்புள்ள பங்கேற்பாளர்கள், ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் ஐந்து பேர் வீதம் பங்கேற்றனர் நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தை ஆண்டனி மகேஷ், அருட்சகோதரி மிஸ்ஸி மரியா SJSM, அருட்சகோதரி எமிலி CMC, திருமதி. ஷைனி, திரு. எட்வின்சன், திரு. ஷோனிக் ரீகன் மற்றும் டாக்டர். பியூலின் ஆகியோர் பங்கேற்றனர்.

"இன்றைய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் எவ்வாறு போதைக்கு அடிமையாதல்" என்ற முக்கிய கருப்பொருளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சியாக, சிறந்த கருத்தாளர்களால் நுண்ணறிவுமிக்க அமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களோடு நடைபெற்றது. முதல் நாள் மாலை, மறைமாவட்ட செயலாளர்கள் கூட்டமும் நடைபெற்றது. இக்கூடுகையின்போது அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதார ஆணையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

## ஆறுகாணியில் கன்னியர் இல்லம் மந்திரிப்பு

1969 ஜூலை 7, ஆசீர்வதிக்கப்பட்ட புனித திரு இருதய கன்னியர் இல்லம், 55 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளது. எனவே, மாகாணத்தின் முடிவின்படி, கன்னியர்

இல்லத்தை ஒட்டிய மற்றொரு மகளிர் விடுதியானது இப்போது காலியாக உள்ளது, அது புதுப்பிக்கப்பட்டு புதிய கன்னியர் இல்லமாக மாற்றப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட கன்னியர் இல்லம் 2025 ஆகஸ்ட் 30, மாலை 4.30 மணிக்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்களால் மந்திரிக்கப்பட்டது.

## அருட்தந்தை ஜோசப் மடத்தில் இறுதி மரியாதை

2025 ஆகஸ்ட் 08, அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்கள் இயற்கை எய்தினார். நமது மறைமாவட்டத்திற்கு 16 வருடங்கள் அவர் சேவையை அர்ப்பணித்தார். 1963 கன்னியாகுமரி மறைபரப்பு தளத்தில் சுறுசுறுப்பு மிக்க ஆர்வமுள்ள பங்கு தந்தையாக தனது மறைபரப்பு பணியை மஞ்சாலுமூட்டில் தொடங்கினார். இவரது அயராத மறைபரப்பு பணியால் முக்கூட்டுக்கல், தெற்றிவிளை, மலைக்கோடு, மாறப்பாடி, வலியவிளை போன்ற பகுதிகளில் புதிய கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார். 1965 ஆம் ஆண்டில், மறைபரப்பு பணியை நீட்டிக்கவும், மக்களுக்கு ஆதரவளிக்கவும், அருட்தந்தை ஜோசப் மடத்தில், சங்கனாச்சேரி மறைமாவட்டத்திலிருந்து புனித திரு இருதய அருட்சகோதரிகளை அழைத்தார். இது கன்னியாகுமரி மறைபரப்பு தளத்தின் முதல் அருட்சகோதரிகளின் வருகையாக அமைந்தது. 1969 ஆம் ஆண்டு முக்கூட்டுக்கல்லில் திருகுடும்ப ஆரம்பப் பள்ளியை நிறுவி, மாணவர்களுக்கு இலவசக் கல்வி மற்றும் இலவச உணவு வழங்கினார். பதினாறு ஆண்டுகள் அர்ப்பணிப்புள்ள மறைபரப்பு சேவைக்குப் பிறகு, அருட்தந்தை மடத்தில் அவர்கள் 1977 இல் தனது சொந்த மறைமாவட்டத்திற்குத் திரும்பினார். கன்னியாகுமரி மறைபரப்புதள வளர்ச்சியில் அவரது பங்களிப்பிற்காக தக்கலை மறைமாவட்டம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்களின் உடலானது 11 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை பிற்பகல் 2:45 மணி முதல் முட்டாரில், குமரம்சிராவில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. இறுதிச் சடங்குகளின் முதல் பகுதி 12 ஆகஸ்ட் 2025 அன்று மதியம் 1:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இரண்டாவது பகுதி குமரம்சிரா புனித தோமையார் ஆலயத்தில் பிற்பகல் 2:25 மணிக்கு நடைபெற்றது. பேராயர் மார் தோமஸ் தறயில் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும் மற்றும் அவர் பணியாற்றிய ஆலயங்களை சேர்ந்த இறைமக்களும், அவருக்கு பிரியாவிடை அளிக்க வந்திருந்தனர்.

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயம்



ஆகஸ்ட் 15, புனித மரியாவின் விண்ணேற்பு திருநாள் காலை 7:00 மணிக்கு திருப்பலியோடு கொண்டாடப்பட்டது. இதில் புனித மரியாவின் பெயரைக் கொண்டவர்கள் புனித மரியாவின் வேடம் அணிந்து வந்து திருப்பலியில் சிறப்பித்தனர். அவர்களுக்கு திருப்பலியில் முடிவில் கேக் வெட்டி இனிப்பு மற்றும் ஜெப மாலையும் பங்கு தந்தையால் வழங்கப்பட்டது. இறுதியில் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முக்கூட்டுக்கல் ஆகஸ்ட் 17, நலவாழ்வு பணிக்குழு உருவாக்கப்பட்டு, இதன் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூடு

ஆகஸ்ட் 01, இரண்டு அருட்கன்னியர்கள் சத்தீஸ்கரில் கைது செய்ததை கண்டித்து நாகர்கோவிலில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் நமது ஆலயம் சார்பாக பங்கு தந்தை, கன்னியர்கள் மற்றும் பங்கு மக்கள் கலந்து கொண்டனர். ஆகஸ்ட் 03, நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல திருவிழாவிற்கு நமது ஆலயத்திலிருந்து பங்கு தந்தை தலைமையில் 58 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 8 ஆம் தேதி, 9 வருடம் நமது பங்கு தந்தையாக இருந்து முதல் ஆலயத்தை கட்டிய பேரருட்தந்தை ஜோசப்



மடத்தில் காலமானார் 12 ஆம் தியதி சங்கனாசேரி மறைமாநிலம் முட்டார் ஆலயத்தில் நடைபெற்ற நல்லடக்க சடங்கில் பங்கு தந்தை தலைமையில் நமது ஆலயம் சார்பாக கலந்து கொண்டோம்.

### ▶ திருச்சிலுவை ஆலயம் மாலைக்கோடு



அருள் சகோதரிகளின் வீடு சந்திப்பு ஆகஸ்ட் 16 முதல் ஆகஸ்ட் 23 வரை நடைபெற்றது.

## தக்கலை பிலாங்காலை

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

ஆகஸ்ட் 03, பங்குமக்கள் அனைவரும் புனித அல்போன்சா ஆலயம் திருவிழாத் திருப்பலியில் பங்கு கொண்டனர். 4 ஆம் தேதி, புனித ஜான் மரிய வியானி திருவிழா கொண்டாடப்பட்டது. தொடர்ந்து அனைத்து வீடுகளிலும் வீடு மந்திரிப்பு நடைபெற்றது. 15 ஆம் தேதி, புனித விண்ணேற்பு அன்னையின் திருவிழா மற்றும் ஆராதனை நடத்தப்பட்டது.

### ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் வெள்ளாம்பி

புனித அல்போன்சா நவநாள் திருப்பலி ஆகஸ்ட் 10 ம் தேதி சிறப்பிக்கப்பட்டது.

### ▶ புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

ஆகஸ்ட் 03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 10 ஆம் தேதி நடைபெற்ற மறைக்கல்வி ஆண்டுவிழாவில் மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர். வணக்கத்துக்குரிய மார் தோமஸ் குரியாளச்சேரி ஆயரின் விண்ணக பிறப்பின் நூற்றாண்டு விழா நினைவு பேச்சுப்போட்டி sabs St. chantal provincial house சூசைபுரத்தில் நடைபெற்றது. அதில் செல்வி பபிஷா கலந்து கொண்டு இளையோர் பிரிவில்

முதல் பரிசை பெற்றார். 15 ஆம் தேதி மரியாவின் விண்ணேற்பு திருவிழா திருப்பலி நடைபெற்றது. தாய்மார்கள் திருப்பலியை சிறப்பித்தனர். காணிக்கை பவனி நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் நேர்ச்சை வழங்கப்பட்டது.

### புனித அன்னை தெரசா ஆலயம் கல்லுவிளை



ஆகஸ்ட் 03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 15 ஆம் தேதி மரியாவின் விண்ணேற்பு திருவிழா திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு நலன் வேண்டி சிறப்பு செபம் செய்யப்பட்டு, தேசிய கொடி ஏற்றப்பட்டு பங்கு மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பின்பு புனித மரியாவின் பெயரைக் கொண்ட அருட்சகோதரி ஆன்ஸ் CMC மற்றும் அருட்சகோதரி ஏஞ்சல் CMC ஆகியோருக்கு பெயர் விழா பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

ஆகஸ்ட் 01, பங்குதந்தையின் பிறந்தநாள் அவருக்காக திருப்பலியில் ஜெபித்து பங்குமக்களால் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மாலையில் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள அருட்சகோதரிகளின் விடுதலைக்காக நடந்த ஆர்ப்பாட்டத்தில் 22 பேர் கலந்து கொண்டனர். 03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 04 ஆம் தேதி பங்கு குருக்களின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியானி திருநாளை முன்னிட்டு பங்குதந்தை மற்றும் அனைத்து குருக்களுக்காக ஜெபித்து திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தைக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்தி அன்பளிப்பு வழங்கப்பட்டது. 06 ஆம் தேதி ஆலய திருவிழாவிற்கான வீடு மந்திப்பு அனைத்து உறவியங்களிலும் நடைபெற்றது. 09 ஆம் தேதி இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை, தைலம் பூசுதல் திருச்சடங்கு மற்றும் நேர்ச்சை உணவு வழங்கப்பட்டது. 15 ஆம் தேதி தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு ஆலயத்தில் காலை 6.15 மணிக்கு காலை ஜெபம் மற்றும் திருப்பலி

நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் புனித அன்னை மரியாள் உறவிய இறைமக்கள் சார்பில் நேர்ச்சை வழங்கப்பட்டது. தொடர்ந்து பள்ளிக்கூடத்தில் பங்குதந்தையால் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து திருப்பணியாளர் கூட்டம் நடைபெற்றது. 17 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோருக்கு அருட்தந்தை ஆல்பட் ஜோஸ் அவர்கள் வகுப்பு நடத்தினார். 24 ஆம் தேதி பிலாங்காலை மறைவட்ட பங்கு திருத்தொண்டு பணிக்குழுவின் சார்பில் பங்குத்தந்தை பேரருள்தந்தை ஜோஷி அவர்கள் தலைமையில் பங்கு திருத்தொண்டு பணியாளர்கள் சுமார் 20 பேர் திருநெல்வேலி, கயத்தாறு (ராஜா புதுக்குடி) மற்றும் T N குளம் ஆகிய திருத்தொண்டு தளங்கள் சந்திக்கப்பட்டது. ஆலய சந்திப்பு மற்றும் வீடுகள் சந்திப்பு என இரு நிலைகளில் சந்திப்பு நடைபெற்றது. திருநெல்வேலி திருத்தொண்டு தளத்தில் அருட்தந்தை டோபின் அவர்களும் கயத்தாறு திருத்தொண்டு தளத்தில் அருள்தந்தை அஜின் CR அவர்களும் அனைவரையும் வரவேற்று அங்கு செயல்படும் மறைபரப்பு பணிகள் குறித்து விளக்கினர். கயத்தாறு திருத்தொண்டு தளத்தில் உள்ள இறை சமூகத்திற்கு பிலாங்காலை பங்கு மக்கள் அளித்த போர்வை, துணிகள், அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள், மற்றும் பண உதவி என சுமார் 25,000 ரூபாய் அளவில் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வினை பங்கு ஒருங்கிணைப்பாளர் திரு பால்ராஜ் அவர்களோடு மறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். பங்கில் பல வருடங்கள் பணியாற்றிய திருநெல்வேலி பங்கை சார்ந்த திரு சீமோன் அவர்களின் திருமண நிகழ்வில் பங்குதந்தை மற்றும் அருட்தந்தை லூக்கா அருட்தந்தை ஆல்பட் அவர்கள் அனைவரும் திருப்பலி ஆற்றி ஜெபித்து வாழ்த்துக்கள் கூறினர். 50 க்கு மேற்பட்ட மக்களும் கலந்து கொண்டனர். 30 ஆம் தேதி சூசைபுரம் கல்லூரியில் வைத்து நடைபெற்ற உறவிய பொறுப்பாளர்களுக்கான கருத்தரங்கில் உறவிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



### புனித ஜார்ஜியார் ஆலயம் ஆனையடி

ஆகஸ்ட் 15 ஆம் தேதி பங்குதந்தையின் பெயர் கொண்ட திருவிழா கொண்டாடப்பட்டது. 15 ஆம் தேதி புனித விண்ணேற்பு அன்னை திருவிழாவை

முன்னிட்டு ஆடம்பர திருப்பலி, கலைநிகழ்ச்சிகள் மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது. முதியோர் தினத்தன்று அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. வின்செண்ட் தே பவுல் சபை சார்பாக ஒரு முதியவருக்கு மாதம் 200 ரூபாய் கொடுக்கும் திட்டம் தொடங்கி இருக்கின்றார்கள். அனைத்து உறவியங்களிலும் உறவியக்கூட்டம் நடைபெற்றது.

### புனித அல்போன்சா ஆலயம் நாகர்கோவில்



புனித அல்போன்சா ஆலய மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் 44 உணவு பொட்டலங்கள் செய்து புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் சென்று அங்குள்ள ஏழைகளுக்கு வழங்கினர்.

## சூசைபுரம்

### புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

ஆகஸ்ட் 15, மாதாவின் விண்ணேற்பு விழாவை முன்னிட்டு மாலை ஐந்து 5.30 மணிக்கு திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனி நடைபெற்றன. 16 ஆம் தேதி மறைமாவட்ட அளவில் நமது இளையர்கள் சார்பாக சூசைபுரத்தில் வைத்து நடத்திய கிரிக்கெட் போட்டி நமது இளையோர்கள் முதலிடத்தை பெற்றனர். 17 ஆம் தேதி புனித அல்போன்சா உறவிய ஆண்டு விழா பங்கு தந்தை தலைமையில் ஜெபமாலையுடன் ஆரம்பித்து கலை நிகழ்ச்சி மற்றும் இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டன. 24 ஆம் தேதி பங்குத்தந்தை தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றது. 27 ஆம் தேதி எதிர்நோக்கு பயணத்தை முன்னிட்டு மிஷன் லீக் பிள்ளைகள் அருட்தந்தை அருள்சகோதரிகள் மற்றும் பொறுப்பாளர்கள் முக்கடல் அனாதை இல்லத்தை சந்தித்து உதவித்தொகை வழங்கினார்கள். 31 ஆம் தேதி புதிய திருப்பணியாளருக்கு சிறப்பு ஜெபம் சொல்லி புதிய கொத்தீனா வழங்கப்பட்டன. ஓண பண்டிகை முன்னிட்டு இளையோர்கள் அத்தப்பூ போட்டு சிறப்பித்தனர்.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

ஆகஸ்ட் 03, அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் அருள் தந்தை அருள்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 15 ஆம் தேதி மாதாவின் விண்ணப்பு விழாவை முன்னிட்டு காலை 6.30 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. எல்லா வியாழக்கிழமைகளிலும் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

### புனித தேவமாதா ஆலயம் கிள்ளியூர்

ஆகஸ்ட் 03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 4 ஆம் தேதி, புதுப்பிக்கப்பட்ட அருள்தந்தையின் இல்லம் திருப்பலி முடிந்தவுடன் மறைவட்ட பேரருள்தந்தை ஜோன்ஸ்லால் அவர்கள் தலைமையில் மந்திரிக்கப்பட்டது. 15 ஆம் தேதி மாதாவின் விண்ணேற்பு விழாவை முன்னிட்டு சிறப்பு திருப்பலி அதைத் தொடர்ந்து ஆடம்பர ஜெபமாலை பவனியும் நவநாள் ஜெபமும் நடைபெற்றது. 27 ஆம் தேதி ஆலய திருவிழாவை முன்னிட்டு மறைக்கல்வி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன.

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

சத்தீஸ்கர் மாநிலத்தில் பணி செய்த அருள்சகோதரிகள் ப்ரீத்தி மேரி மற்றும் வந்தனா பிரான்சிஸ் ஆகியோரின் முறையற்ற கைதை கண்டித்து ஆகஸ்ட் 01, நாகர்கோயிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கிலிருந்து திரளான மக்கள் கலந்து கொண்டனர். 03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 4 ஆம் தேதி புனித ஜான் மரிய வியானி திருநாள் பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்கு தந்தை அஜின் ஜோஸ் அவர்தள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கி அந்நாளை சிறப்பித்தார். 15 ஆம் தேதி நாட்டின் சுதந்திர தினம் மற்றும் மாதாவின் விண்ணேற்பு தினம் பங்கில் திருப்பலியோடு அனுசரிக்கப்பட்டது. தொடர்ந்து கொடியேற்று நிகழ்வு நடைபெற்றது. அதில் பங்கை சார்ந்த ராணுவ வீரர் திரு. குணசீலன் சுதந்திர தின உரையாற்றினார். 16 ஆம் தேதி சூசை புரத்தில் நடைபெற்ற மார் தோமஸ் குரியாளசேரி அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவில் பங்கில் இருந்து திரளான மக்கள் பங்கேற்றனர். 23 இல் உறவிய தலைவர்கள் கூடுகை நடைபெற்றது. 24 ஆம் தேதி பங்கு இளையோர்கள் பங்குத்தந்தையோடு இணைந்து காரோடு புனித தேவ சகாயம் மனநல காப்பகத்தை சந்தித்து அவர்களுக்காக ஜெபித்து உதவியும் செய்தனர். இது அவர்களுக்கு ஒரு புது அனுபவமாக அமைந்தது.



ஒருங்கிணைப்பாளர் அருள் சகோதரி ஜோதிஸ் SABS அவர்கள் நிகழ்வினை வழிநடத்தினார். 29 இல் மாதாந்திர தியானம் பங்கில் வைத்து நடைபெற்றது. 30 இல் உறவிய பொறுப்பாளர்களுக்கான தியானம் சூசைபுரத்தில் வைத்து நடைபெற்றது. பங்கு உறவிய பொறுப்பாளர்கள் அதில் பங்கேற்றனர். 31 ஆம் தேதி மறைக்கல்வி மாணவ மாணவிகளுக்கான எழுத்து மற்றும் போட்டிகள் நடைபெற்றன. பங்கு நலவாழ்வு பணிக்குழுவினர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் 10 பேர் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர்.

### ▶ பாத்திமா மாதா ஆலயம் பாத்திமாபுரம்

ஆகஸ்ட் 15, மாதாவின் விண்ணேற்பு திருவிழா ஆடம்பர திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. திருப்பலி முடிந்த பிறகு மரியாயின் சேனை உறுப்பினர்களால் இனிப்பு வழங்கப்பட்டது.

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம் சூசைபுரம்

ஆகஸ்ட் 3, நாகர்கோவில், புனித அல்போன்சா திருத்தல திருவிழா திருப்பலியில் பங்கு மக்களில் பெரும்பாலானோர் பங்கேற்றனர். 04 ஆம் தேதி, பங்கு தந்தையரின் பாதுகாவலரான புனித ஜாண் மரிய வியானியின் திருநாளை முன்னிட்டு காலை நடைபெற்ற திருப்பலிக்கு பின்னர் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோண்ஸ்லால் அவர்களுக்கு பங்கு மக்களால் வாழ்த்துக்கள் கூறப்பட்டன. 15 ஆம் தேதி, அன்னையின் விண்ணேற்பு தினத்தன்று காலை 6.15 மணிக்கு நடைபெற்ற ஆடம்பர திருப்பலிக்குப் பின்னர் பங்குத்தந்தை அவர்களால் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. 16 ஆம் தேதி, சங்கனாச்சேரி மறைமாவட்டத்தின் முதல் ஆயரும் நற்கருணை ஆராதனை சபை நிறுவனருமாகிய வணக்கத்திற்குரிய ஆயர் மார் தாமஸ் குரியாளச்சேரியின் இறப்பின் நூறாவது ஆண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் நற்கருணை ஆராதனை மற்றும் திருப்பலியும் பிற்பகல் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. ஆயர் குரியாளச்சேரி அவர்களின் வாழ்க்கை வரலாறு நாடகமாக நடித்துக்காட்டப்பட்டது. 26 ஆம் தேதி, கன்னியர் இல்லத்தில் நாற்பது மணி நேர நற்கருணை ஆராதனை தொடங்கப்பட்டது. 30 ஆம் தேதி, சூசைபுரம் மற்றும் தக்கலை - பிலாங்காலை மறைவட்ட உறவிய பொறுப்பாளர்களுக்கான தியானம் மற்றும் கருத்தரங்கம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது.

### ▶ புனித லொரைட்டோ அன்னை ஆலயம் பிலாங்கரை

பிலாங்கரை ஆலயத்திற்கு சொந்தமான குளச்சல் பகுதியிலுள்ள குருசடியில் ஜூலை 20 ஆம் தேதி முதல் முறையாக திருப்பலி நிறைவேற்றப்பட்டது. லொரைட்டோ அன்னை ஆலயத்திற்கு சொந்தமான கெபி பராமரித்து வர்ணம் பூசப்பட்டது. ஆகஸ்ட் 08 தேதி முதல் 17 தேதி வரை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முதல் திருவிழாவின் போது முதல் திருவிருந்து வழங்கப்பட்டது. எட்டாம் திருவிழா திருப்பலி ஆயர் அவர்களால் சிறப்பிக்கப்பட்டது. நிறைவு நாளன்று இராசைத் திருப்பலி, அன்பின் விருந்து மற்றும் திருக்கொடி இறக்குதலும் நடைபெற்றன. மாலையில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் சிறப்பிக்கப்பட்டது. விழா நிகழ்வுகளை திருவிழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## களியல்

### ▶ புனித தோமையார் தேவாலயம் மாறப்பாடி

03 ஆம் தேதி அல்போன்சா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு மக்கள் திரளான பேர் பங்கேற்றனர். 4 ஆம் தேதி மாதத்தின் முதல் திங்கள் கிழமை மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை மறைவட்ட இறை அழைத்தல் இயக்குனர் (Vocation Promotors) அருட்தந்தையர்கள் ஒன்று கூடி இறை அழைத்தலுக்காக ஒரு மணி நேரம் நற்கருணை ஆராதனை நடத்தினார்கள். 15 ஆம் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு காலை 7.00 மணிக்கு பங்கு தந்தை அவர்களால் கொடியேற்றப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது. அன்று மாலை 6.00 மணிக்கு ஜெபமாலையும் மாதாவின் விண்ணேற்பு திருநாள் ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. 17 ஆம் தேதி மறைக்கல்வி இயக்கம் மற்றும் சிறுமலர் மிஷன் இயக்கம் சார்பாக மாதாவின் விண்ணேற்பு திருநாள் கொண்டாடப்பட்டது. 31 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கத்தினை பார்வையிடுவதற்காக மாதர் ஜோதிஸ் இயக்குனர் தந்தை ஜிம்மி மற்றும் களியல் மறைவட்ட தலைவர் திருமதி. நிஷா அவர்களும் வருகை புரிந்தனர். இயக்கத்தை பார்வையிட்டு அறிவுரைகளையும் கூறினர்.

### ▶ திரு இருதய ஆலயம் பள்ளிக்கோணம்

சத்தீஸ்கர் மாநிலத்தில் பணி செய்த அருள்சகோதரிகள் ப்ரீத்தி மேரி மற்றும் வந்தனா பிரான்சிஸ் ஆகியோரின் முறையற்ற கைதை கண்டித்து ஆகஸ்ட்



01, நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கிலிருந்து 7 பேர் கலந்து கொண்டனர். 10 ஆம் தேதி கிறிஸ்து ஜூபிலி 2025 நிகழ்ச்சியில் மறைமாவட்ட அளவில் முதல் தரம் மறைக்கல்வி என்ற பட்டத்தையும், மறைமாவட்டத்தில் சிறந்த முதல் நிலை ஆசிரியர்கள் என்ற பட்டத்தை வென்றுள்ளனர். 25 ஆண்டுகள் தொடர்ந்து மறைக்கல்வி ஆசிரியர்களாக பணியாற்றிய மூன்று ஆசிரியர்களுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. 15 ஆம் தேதி மாதா விண்ணேற்பு விழா மற்றும் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. 17 ஆம் தேதி திருப்பலி முடிந்த உடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 22 ஆம் தேதி திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் வேண்டுகோளின்படி. உலக அமைதிக்காக நோன்பு, ஒரு சந்தி, இறை வேண்டல்கள், திருப்பலி மற்றும் சிறப்பு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. 24 ஆம் தேதி புனித எவுப்பிராசியம்மாவின் பொன் மொழிகள் ஒப்புவித்தல் போட்டி மறைக்கல்வி மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. 31 ஆம் தேதி, புனித எவுப்பிராசியம்மா பெயர் கொண்ட திருவிழா திருப்பலி முடிந்தபின் கொண்டாடப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் காரோடு



ஆகஸ்ட் 15, அன்னை மரியாவின் விண்ணேற்றம் மற்றும் சுதந்திர தினத்தை முன்னிட்டு காலை 6.30 மணியளவில் சிறப்பு திருப்பலி மற்றும் தேசிய கொடியேற்றுதல் நிகழ்வு நடைப்பெற்றது. அதைத் தொடர்ந்து புதிய குருசடி கட்டுவதற்கான அடிக்கல் பங்குதந்தை அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் அவர்களால் போடப்பட்டது. ஆகஸ்ட் 31, இளைஞர் இயக்கம் சார்பாக ஓணப்பண்டிகை கொண்டாடப்பட்டது.

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

ஆகஸ்ட் 1, இரண்டு அருட்கன்னியர்கள் சத்தீஸ்கரில் கைது செய்ததை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அருட்கன்னியர்கள் மற்றும் பங்கு மக்கள் கலந்து கொண்டார்கள். 3 ஆம் தேதி புனித அல்போன்சா திருத்தல திருவிழா திருப்பலிக்கு சுமார் 150 பேர் கலந்து கொண்டார்கள். 15 ஆம் தேதி மாதாவின் விண்ணேற்பு தினம் கொண்டாடப்பட்டது. 24 ஆம் தேதி மரியாயின் சேனை கியூரியா கூட்டம் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள்

தலைமையில் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட அளவில் உள்ள மரியாவின் சேனைப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். 31 ஆம் தேதி இளைஞர் இயக்கம் சார்பாக ஓணப் பண்டிகை கொண்டாடப்பட்டது. தொடர்ந்து பங்கு மக்கள் விவிலியத்தை பற்றிய அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்யநேசன் அவர்களால் விவிலியம் அறிவோம் என்ற சிறப்பு வகுப்பு துவங்கப்பட்டது. இவ்வகுப்பு எல்லா மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

### ▶ மார்டின் டி போரஸ் ஆலயம் கழுவன்திட்டை



ஆகஸ்ட் 03 ஆம் தேதி பொது மன்றம் நடைபெற்றது. 10 ஆம் தேதி பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. 22 மற்றும் 28 ஆம் தேதி ஆகிய இரு நாட்களில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. 31 ஆம் தேதி திருப்பலிக்குப்பின் ஓணப் பண்டிகை கொண்டாடப்பட்டது.

### ▶ புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

31 ஆம் தேதி ஓணப்பண்டிகையை முன்னிட்டு அத்தப்பூ போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

## தென்காசி மறைத்தள செய்திகள்

### வாஞ்சிநகர் தூய மரியன்னை ஆலய திருவிழா

ஆகஸ்ட் மாதம் 15 முதல் 18 வரை நான்கு நாட்கள் திருவிழாவானது மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## MONTHLY AGENDA – SEPTEMBER 2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Mon | CML: Read the short biography of St. Mother Theresa in group meeting<br>KKSSS: SHG Onam Celebration at Vayalinkarai |
| 5 | Fri | CAT: Seminar for VIII and IX at Kalluvilai<br>VC: Adoration for Vocation (Manjalumoodu Forane)<br>KKSSS: Educare Class<br>SINAI: Retreat at Vattakottai<br>SVP: Onam celebration at Osanam Centre<br>ASc: Teachers' Day celebration and competitions |
| 6 | Sat | FA: Seminar for the Alcohol addicted<br>SMYM: Animators' Meeting |
| 7 | Sun | CML: Study the History of The Nativity of Mary HC: Grandparents Day Celebration at Palappallam<br>KII: Unit visit within the forane<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Thadikkarakonam<br>LC: Central Council Meeting at Kalluvilai<br>SMYM: Nithiravilai Forane Unit Executive Meeting<br>SVP: CC Meeting<br>MJ: Director's visit to Munchirai Parish<br>URM : Meeting for Uraviyam Forane directors and animators at Padanthalumoodu |
| 8 | Mon | EIRD: Kanyakumari United Christian Council Meeting |
| 9 | Tue | SINAI: Intercessory Prayer |

| | | |
|---|---|---|
| 12 | Fri | Priests' Conference @ Sangamam<br>MIG: Core Committee Meeting |
| 13 | Sat | KKSSS: Governing board and General body meeting<br>SINAI: Evening Retreat at Malaicode<br>FA: Marriage Preparation Course<br>CRI: Monthly Recollection<br>Tenkasi Mission Meet |
| 14 | Sun | CML: Read the short biography of Fr. Joseph Maliparambil in group<br>LC: Forane Leaders Meeting<br>SMYM: Youth Election<br>FA: Marriage Preparation Course<br>SVP: AC Annual Day<br>MJ: Skit competition |
| 15 | Mon | EIRD: Regional United Christian Council Meeting |
| 16 | Tue | Episcopal ordination of Mar George Rajendran SDB (2012)<br>SINAI: Intercessory Prayer |
| 17 | Wed | KKSSS General Body Meeting |
| 19 | Fri | SINAI: Evening Retreat at Palappallam |
| 20 | Sat | Forane Vocation Promoters Meet @ Bishop's House<br>MJ: Awareness programme |
| 21 | Sun | KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Soosaipuram<br>SMYM: Youth Election<br>URM: Nithiravilai Forane Leaders Meeting<br>SVP: AC Annual Day<br>MJ: Director's visit to Nithiravilai Parish<br>URM: Christ Jubilee Celebration of Uraviums |

| | | |
|---|---|---|
| 23 | Tue | SINAI: Intercessory Prayer |
| 27 | Sat | HC: Bedridden patients and Bystanders meet at Manjalumoodu<br>KII: Forane level monthly activity<br>SINAI: One day Retreat at Kalluvilai<br>ASc: Guidance class for non-teaching staff<br>MJ: One hour class |
| 29 | Mon | VC: Vocation camp |
| 30 | Tue | SINAI: Intercessory Prayer<br>VC: Vocation camp |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

| BIRTHDAY OF REV. FATHERS - SEPTEMBER - 2025 | |
|---|---|
| FR. JOSE MUTTATHUPADOM | 02 |
| FR. JOJO VARGHESE MATTATHIL CMI | 11 |
| FR. AMANTO EDAKKOOTTATHIL | 16 |
| FR. SHOJI PUTHENPURACKAL | 23 |
| FR. THOMAS SAURIAMKUZHY | 25 |
| FR. MATHEW KUZHINJALIL | 28 |
| FR. JOICE CHELACHUVATTIL MCBS | 30 |

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**செப்டம்பர் 01 – எட்டு நாட்கள் நோன்பு தொடக்கம்**

**செப்டம்பர் 08 – புனித கன்னி மரியாவின் பிறப்பு**

**செப்டம்பர் 11 – அருட்தந்தையர்கள் கூடுகை**

**செப்டம்பர் 16 – பெங்கிரி ஆலய அர்ச்சிப்பு**

| BISHOP'S ENGAGEMENTS - SEPTEMBER 2025 | | | |
|---|---|---|---|
| DATE | DAY | TIME | EVENTS |
| 1 | Mon | | Bishop's House |
| 2 | Tue | 09.00 am | Tamil medium school visit |
| 3 | Wed | 09.00 am<br>03.00 pm | Tamil medium school visit<br>Bishop's House: College of consulters meeting |
| 4 | Thu | 09.30 am<br>02.00 pm<br>04.00 pm | Nithiravilai: Marriage Holy Qurbana<br>Varuthattu : Parish Visit<br>Annikarai : Parish Visit |
| 5 | Fri | | Bishop's House |
| 6 | Sat | 06.30 pm | Killiyoor: Feast Day Qurbana |
| 7 | Sun | 09.00 am<br>07.00 pm | Sundarapandiyapuram : Feast Day Qurbana Thoothukudi : Feast Day Qurbana |
| 8 | Mon | 06.30 pm | Cheenivilai : Feast Day Qurbana |
| 9 | Tue | 10.00 am | Bishop's House |
| 10 | Wed | 10.00 am<br>04.00 pm | Soosaipuram : Parish Visit<br>Paraicode : Parish Visit |
| 11 | Thu | 09.30 am | Sangamam: Priests' Conference |
| 12 | Fri | 09.30 am<br>06.00 pm<br>07.00 pm | Bishop's House: Curia meeting<br>Visit of Mar Joseph Kollamparampil<br>Nagercoil : Marriage Reception |
| 13 | Sat | 03.00 pm | Thenkasi: Mission visit |
| 14 | Sun | 04.00 pm | Kattathurai : Blessing of Kurisadi |
| 15 | Mon | 06.30 am | Padanthalummoodu : Requiem Mass |

| | | | |
|---|---|---|---|
| 16 | Tue | 05.00 pm | Bengiri : Consecration of Bengiri Church |
| 17 | Wed | 10.00 am | Kalluvilai : KKSSS GB Meeting |
| 18 | Thu | | Bishop’s House: Sisters’ Jubilee Celebration |
| 19 | Fri | | Bishop’ House |
| 20 | Sat | 10.00 am | Bishop’s House: Forane Vocation Promoters Meet |
| 21 | Sun | 02.00 pm<br>05.00 pm | Kalluvilai : Christ Jubilee Celebration of Uraviums<br>Vattakottai : Jubilee Holy Qurbana |
| 22 | Mon | 06.30 am | Kavalam: 25 Death Anniversary Holy Qurbana |
| 23 | Tue | 10.00 am<br>12.00 pm | Thettivilai and Kuttaicode: Parish Visit<br>Manjalummoodu : Parish |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**

| FEASTDAYS OF REV. FATHERS - SEPTEMBER 2025 | |
|---|---|
| FR. MATHEW JUDIT CMI | 11 |
| FR. LIJO THEKKEL | 21 |
| FR. MATHEW AREKALAM CMI | 21 |
| FR. MATHEW KUZHINJALIL | 21 |
| FR. MATHEW THEKKEKUTT | 21 |
| FR. MATHEUS ROBERT | 21 |
| FR. SANTHOSH KAYYALAPARAMPIL | 21 |
| FR. SINU M. J. PANICKAPARAMPIL CMI | 21 |




Eucharistic Convention and Centenary Death Anniversary of Mar Thomas Kurialassery at Soosaipuram




Renovated Convent Blessing at Arukani




Awareness programme for the parents by Health Commission






**Vianney Day Celebration at St.Mary's Minor Seminary Mukoottukal**

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570